# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

SIXTH SEMESTER – **APRIL 2019**

**16UTL6MC01– SANGAM LITERATURE**

Date: 01-04-2019 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00-12:00

**பகுதி - அ** (10 x 2 = 20 மதிப்பெண்கள்)

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. எட்டுத்தொகை நூல்களுள் அகம் சார்ந்த நூல்களை எழுதுக.
02. அம்மூவனாரின் தலைவி கூற்றாக நும்பாடப் பகுதியில் அமைந்த பாடலின் பொருள் என்ன?
03. தந்தையை இழந்த பாரி மகளிர் கையறு நிலையாகக் கூறிய செய்தி என்ன?
04. பிசிராந்தையார் தனக்கு நரையில ஆகுதலுக்குரிய காரணங்களாகக் கூறுவன யாவை?
05. தலைவி தான் சந்தித்த தலைவனை எவ்வாறு தோழிக்கு அடையாளம் காட்டுகிறாள்?
06. ''கடைக் கண்ணால் கொல்வான் போல்நோக்கி
    நகைக் கூட்டம் செய்தான்'' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
07. பொதும்பில் கிழார் நற்றிணையில் மந்தியின் செய்கையாகக் கூறுவது என்ன?
08. வெள்ளிவீதியார் வெள்ளாங் குருகினைத் தூதுவிட்ட பாங்கினைக் குறிப்பிடுக.
09. காவிரிப்பூம்பட்டினத்து உணவுச் சாலை பற்றிக் குறிப்பு வரைக.
10. திருமாவளவன் வளம் பெருக்கிய தன்மைப்பற்றி எழுதுக.

**பகுதி - ஆ** (5 x 7 = 35 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. குறுந்தொகையில் தலைவன் கூற்றாக அமைந்த பாடல்களின் பொருள் கூறி தலைவனின் நிலையைப் புலப்படுத்துக.
12. பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நீர்நிலைகளைப் பெருக்கவேண்டி குடபுலவியனார் கூறிய அறவுரைகளைத் தொகுத்து எழுதுக.
13. 'எம்முளும் உளன் ஒரு பொருநன்' என ஔவையார் அதியமானைப் பற்றிக் கூறியதற்குக் காரணங்கள் யாவை?
14. பொருளது நிலையின்மை, தலைவி ஆற்றாமை கூறித் தலைவனைச் செலவழுங்குவித்ததனை விவரிக்க.
15. பெருவழுதி தோழி கூற்றாகக் குறிஞ்சித்திணைச் சார்ந்து கூறும் செய்தியினைக் குறிப்பிடுக.
16. பட்டினப்பாலை கூறும் காவிரியின் பெருமையும் வளமையையும் பற்றி எழுதுக.
17. பட்டினப்பாலை கூறும் திருமாவளவனின் பெருமைகளைக் குறிப்பிடுக.

**பகுதி - இ** (3 x 15 = 45 மதிப்பெண்கள்)

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.**

18. தலைவிக் கூற்றாக வரும் குறுந்தொகைப் பாடற் கருத்துகளைத் தொகுக்க.

    **( அல்லது )**

    நெடுஞ்செழியனும், அறிவுடை நம்பியும் குறிப்பிடும் வாழ்வியல் கருத்துகள் யாவை?

19. ஆயர் மகளிர் குரவை ஆடுவது பற்றி முல்லைக் கலி கூறுவது யாது?

    **( அல்லது )**

    தலைவன் தன் நெஞ்சுக்கும் தேர்ப்பாகனுக்கும் கூறியது யாது?

20. 'பூம்புகார் நகர வீதியினைப் பட்டினப்பாலை எவ்வாறு எடுத்துரைத்துள்ளது என்பதைக் குறித்து எழுதுக.

    **( அல்லது )**

    திருமாவளவனின் போர்த்திறமையையும் வளம் பெருக்கிய தன்மையையும் விவரிக்க.

---